

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!
(சங்கீதம் 119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

வியாழன்தோறும்

| 14.11.2024 | 46. ‘ஈட்டி முனையிலும்’ தம்முடையவர்களை காக்கும் கர்த்தர்! |
|---|---|



**த**மது தாசனாகிய *தாவீதை,* அவனது பிராண பகைஞனாகிய *சவுலுக்கு,* தேவன் ஒருபோதும் ஒப்புக்கொடுக்கவே இல்லை. நேருக்கு நேர் இருவரும் ஒன்றாக அரண்மனையில் இருந்தபோது, தனது கூர்மையான ஈட்டியை *சவுல்* அரசன் *தாவீதின்* மார்புக்கு நேராக எறிகின்றான். ஆனால், அந்த ஈட்டி தாவீதின் நெஞ்சை ஊடுருவிச் செல்லாதவாறு ‘‘தேவகரம்’’ அந்த இடத்தில் அவனைப் பாதுகாத்தது!

“சவுலின் பட்டயம் வெறுமையாய்த் திரும்பினதில்லை” என்று தாவீதே கூறியுள்ளார் (2சாமு.1:22). ஆயினும் அந்த குறிப்பிட்ட நாளில் தேவன் அந்த பட்டயத்தை தமது தாசன் நிமித்தமாக வெறுமையாக திருப்பி அனுப்பி விட்டார்.

*சவுல்* அரசனும், அவனது ராணுவமும் ஒன்று சேர்ந்து, தாவீதை காட்டிலுள்ள ஒரு கௌதாரி பறவையை வேட்டையாடுவதுபோல நீண்ட நாட்களாக தேடி அலைந்து வேட்டையாட நினைத்தும், அந்த எண்ணத்தை கர்த்தர் நிர்மூலமாக்கினார். தமது அபிஷேகிக்கப்பட்ட பிள்ளையான தாவீதை அவர் கண்மணிபோல பாதுகாத்து முடிவிலே தமது நித்திய மகிமையிலே பூரண ஆயுசு காலத்திற்குப் பின்னர் தன்னோடு சேர்த்துக் கொண்டார்!

– **ரத்னம்**